அசல் வழக்கு எண். 115/2022

நாள் : 18.02.2025

வா.சா. : 1

பெயர் : மோகன்

**3 முதல் 7 மற்றும் 9 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பால்பூத் அமைப்பதாக சொல்லியுள்ள இடம் எனக்கு சொந்தமான இடம் இல்லை என்றால் சரி. அது அரசாங்க புறம்போக்கு இடம் என்றால் சரி. அந்த இடம் திருவெண்காடு சுவேதாரேனேஸ்வரர் சுவாமி திருக்கோவிலின் அனுபவத்தில் உள்ள இடம் என்றால் சரியல்ல. அந்த இடம் திருவெண்காடு ஊராட்சிக்கு சொந்தமான இடம் இல்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தை பொறுத்து அனுமதி அளிக்கவோ அங்கீகாரம் வழங்கவோ வட்டாட்சியருக்குதான் அதிகாரம் உள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ 9 ஆவணத்தில் இந்த புல எண்ணில் இவ்வளவு விஸ்தீரணத்தில் பூத் அமைத்துக்கொள்ளுமாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. புல எண் சொல்லவில்லை. 10 க்கு 10 இடத்தில் கட்டிக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. நான் பூத் அமைப்பதாக சொல்லும் இடம் ஊராட்சி மன்றத்திற்கு சம்பந்தம் இல்லாத இடம் என்றாலும் அதில் பூத் அமைத்துக்கொள்ள அனுமதி வழங்க ஊராட்சி மன்ற தலைவருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. அது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு கட்டுப்பட்ட இடம். அதனால் ஊராட்சி மன்ற தலைவருக்கு அனுமதி வழங்க அதிகாரம் உள்ளது. அது ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு கட்டுப்பட்ட இடம் என்று காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். வட்டாட்சியர் சான்று தாக்கல் செய்துள்ளேன். நான் பூத் அமைக்க தேர்ந்தெடுத்துள்ள இடம் திருவெண்காடு சுவேதாரன்ய சுவாமி திருக்கோவிலின் தேர்

நிறுத்துவதற்கான இடம் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் தான் திருவிழக்காலங்களில் திருக்கோவிலின் தேர் அமைக்க ஏற்பாடு செய்வார்கள் என்றால் சரியல்ல. நான் பூத் அமைப்பதாக சொல்லப்படும் இடத்திற்கு பின்புறத்தில் திருக்கோவிலுக்கு சொந்தமான பள்ளியும் அதன் காம்பவுண்ட் சுவரும் உள்ளது என்றால் சரி. காம்பவுண்ட் சுவர் 10 அடி தூரத்தில் அமைந்துள்ளது. நான் பூத் அமைக்க தேர்வு செய்துள்ள இடம் மக்கள் கூட்டமாக கூடக்கூடிய இடம் என்றால் சரி. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதாலும் திருவிழாக்காலங்களில் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் என்பதாலும் தேர் ஏற்பாடு செய்யும் இடம் என்பதாலும் திருக்கோவில் அங்கு ஆவின் பூத் அமைக்க அனுமதி வழங்கவில்லை என்றால் சரியல்ல. அந்த இடம் கோவிலுக்கு சொந்தமான இடம் இல்லை. அதனால் அவர்களிடம் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை. நான் பொதுமக்களுக்கு இடையூறாக பூத் அமைத்திருந்ததால் பொதுமக்களே அந்த பூத்தை அகற்றிவிட்டார்கள் என்றாலும் பிரதிவாதிகள் அகற்றவில்லை என்றால் சரியல்ல. முற்றிலும் தவறு. அதற்கான அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். பூத் அமைப்பதற்கு முன்பு திருக்கோவிலின் அனுமதி கேட்டேன் என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எனது முதல் விசாரணை அபிடவிட்டில் அனுமதி கேட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அப்படி அனுமதி கேட்டு திருக்கோவில் நிர்வாகம் அனுமதி தராத காரணத்தால் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அந்த பூத்தை அகற்றியிருந்தால் நான் கொடுத்த புகாரின் மீது போலிசார் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றாலும் பொய்யான புகார் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை

K. [signature]

என்றால் சரியல்ல. போலிசார் நடவடிக்கை எடுக்காதால்தான் சீர்காழி நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க கேஸ் போட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தின் பாரா 9 ல் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்ததாக சொல்வது 12.11.2020 ல் என்றால் சரி. புகார் கொடுத்தது 23.05.2022 ல் என்றால் சரி. உண்மையாகவே அப்படி சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் அப்படி எந்த சம்பவமும் நடக்காததால் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரின் மீது நடவடிக்கை எடுக்காததால் ஆவணங்கள் சேகரிக்க காலதாமதம் ஏற்பட்டது. வாசாஆ 10 ஆவணத்தில் பணம் செலுத்துபவர் என்ற இடத்தில் எந்த கையெழுத்தும் இல்லை என்றால் சரி. அது ஊராட்சி மன்ற தலைவர் கொடுத்த ரசீது என்னிடம் அப்படி தான் கொடுத்தார். அது செல்லத்தக்க ரசீது இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இந்து அறநிலைய துறை திருக்கோவிலில் பணிபுரியும் பணியாளர்கள் என்றால் சரி. அவர்கள் சட்டவிரோதமான செயலில் ஈடுபட்டால் அவர்களது மேல் அதிகாரிகளிடம் தான் புகார் தெரிவிக்க வேண்டுமென்றாலும் அதுபோல் நான் தெரிவிக்கவில்லை என்றால் என்னுடைய வழக்கிற்கே மேல் அதிகாரிகள் தான் காரணம் அதனால் அவர்களிடம் எப்படி புகார் தெரிவிக்கமுடியும். பொய்யான வழக்கு என்பதால் மேல் அதிகாரிகளிடம் புகார் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கிற்கே மேல் அதிகாரிகள் தான் காரணம் அதனால் அவர்களிடம் எப்படி புகார் தெரிவிக்கமுடியும். இந்த வழக்கிலும் பிரதிவாதிகளின் மேல் அதிகாரிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல சேர்த்திருக்கிறேன். உரிய மேல் அதிகாரிகளை

K. [signature]

சேர்க்காத காரணத்தினாலும் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றால் சரியல்ல. நான் பிராதிலும் முதல் விசாரணை அபிடவிட்டிலும் சொல்லியுள்ளது போல் பிரதிவாதிகள் என்னுடைய பூத்தை எதையும் சேதப்படுத்தவில்லை என்றால் சரியல்ல சேதப்படுத்தியதால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எந்தவித சேதமும் ஏற்படுத்ததாத நிலையில் எனக்கு பொருளாதார நஷ்டம் ஏற்பட்டதாக தவறான சங்கதியை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்டத்தின் பார்வையில் நான் அரசாங்க சொத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்பதாலும் அதனால் நஷ்டஈடு கோர முடியாது என்றால் சரியல்ல. ஊராட்சி மன்ற தலைவர் அரசாங்கம் தான் அவர் தான் எனக்கு அனுமதி கொடுத்துள்ளார். ஊராட்சி மன்ற தலைவருக்கும் இந்த சொத்திற்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றாலும் அவர் கொடுத்ததாக சொல்லும் அனுமதியும் ஏற்க கூடியது இல்லை என்றால் சரியல்ல. எந்தவித முகாந்திரமும் இல்லாமல் பிரதிவாதிகள் அரசாங்க வேலையில் இருப்பதால் அவர்களை பழிவாங்க இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி என் முன்னால் [illegible] அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

18/2/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

18/2/25